| | | |
|---|---|---|
| **Name** | **:** | **Dr. A. A. GNANASUNDARATHARASU, M.A.,M.Ed.,Ph.D.,** |
| **Address** | **:** | **No. 14, MUTHUKARUP PA KONAR NAGAR,<br>RAJAGOPALAPURAM (POST),<br>PUDUKKOTTAI - 622 003. S.INDIA.** |
| **Date of Birth** | **:** | **1-11-1946** |
| **E-mail Address** | **:** | **siddhukamal@gmail.com** |
| **Contact Phone No.** | **:** | **99429 04532, 94428 69626** |
| **Landline Phone** | **:** | **04339-272151** |


# நகரத்தார் பண்பாட்டைக் கட்டிக் காக்கும் பின்னணியில் அவர்தம் இன்றைய நிலையும் ஐம்பது ஆண்டின் பின்னர் உள்ள எதிர்பார்ப்பும்

## நகரத்தார் திருமண உறவுகள்

நகரத்தார் வாழ்வில் திருமணம் என்பது ஒரு மையமாக இருக்கிறது. அதனால்தான் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து மிகப்பழம் காலம் முதல் அதனைச் சீரும் சிறப்புமாகக் கொண்டாடி வருகிறோம். திருமண உறவு என்பது நகரத்தார் சமூகத்தில் எதிர்கால வாழ்க்கைக்கு இடப்படும் ஒரு வித்தாகக் கருதப்படுகிறது. வித்தானது ஆலமரம் போலத் தழைத்து வேரூன்றித் தமக்கும் பிறருக்கும் பயன் நல்கும் இல்லறமாக மலரவேண்டும் என்பதே இதன் குறிக்கோள். அதனால்தான் இது 'இல்லறம்'என்று தருமத்துடன் ஒருங்கிணைத்துச் சொல்லப்பட்டது. இல்லற தருமத்தைத் திருமணத்தின் மூலம் ஏற்றுப் பலருடைய வாழ்த்துகளுடன் தொடங்க வேண்டும் என்பதே இதன் அடிப்படைத் தத்துவம்.

ஆனால் காலமாற்றத்தின் காரணமாக நம்மைச் சுற்றிலும் நடைபெறுகின்ற பல நிகழ்ச்சிகளின் தாக்கத்தால் நகரத்தார் சமூகத்தில் இன்றைக்கு மணமுறிவு ஒரு பெரும் பிரச்சனையாக உருவெடுத்து வருகிறது.

## 'மணமுறிவு' ஒரு மேலைநாட்டுக் கலாசாரம்

மணமுறிவு என்பது ஐரோப்பியக் கலாச்சாரம். மேலை நாட்டு வாழ்ககை முறைக்கு வேண்டுமானால் மணமுறிவு உகந்ததாக இருக்கலாம்.

மேலைநாட்டு வாழ்க்கை முறையிலிருந்து, கீழை நாட்டு வாழ்க்கை முறை மிகவும் வேறுபட்டது. மேலை நாட்டினர் மனைவியை வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு துணையாக (better half) மட்டுமே கருதுகின்றனர். நாம் அப்படி இல்லை. வாழ்க்கையில் ஒருவர் ஒருவரில் கலந்து வாழ்க்கைத் தருமத்தை ஆற்றுகின்ற உயிர்க்கலப்பாகத் திருமணம் அமைய வேண்டும் என்பதே நமது குறிக்கோள். இதனால்தான் மனைவியை 'சகதர்மிணி'என்றும் 'இல்லாள்'என்றும் நாம் அழைக்கின்றோம். "செம்புலப் பெயல் நீர் போல அன்புடைய நெஞ்சம் தாம் கலந்தனவே"என்று சொல்லப்பட்ட படி,

செம்மண்ணில் பெய்த மழையானது அந்தச் செம்மண்ணுடன் வேறு பிரிக்க முடியாத படி ஒன்று கலந்ததைப் போலத் திருமண உறவு பிரிக்க இயலாத உறவாகத் தழைக்க வேண்டும் என்பதே நமது பண்பாடு. பொருள் ரீதியாக, உடல் ரீதியாக, மனரீதியாக, இதிலே முறிவு ஏற்படுவதை நாம் விரும்புவது இல்லை.

## மணமுறிவுக்கான மூன்று காரணங்கள்

எனினும் காலச் சூழல் காரணமாக மணமுறிவுகள் பல இடங்களில் ஏற்படுகின்றன. மண முறிவுக்கு ஏற்கெனவே குறிப்பிட்ட வண்ணம் மூன்று அடிப்படைக் காரணங்களைக் கூறலாம், : 1) மனரீதியாக வருபவை 2) உடல் ரீதியாக வருபவை 3) பொருள் ரீதியாக வருபவை.

## மனரீதியாக வருபவை

பெரும்பாலான மண முறிவுகள் மனரீதியாக வருகின்றன. மணமக்களில் ஒருவர் மற்றவர் மீது காணும் குற்றத்தின் அடிப்படையில் மனரீதியான மாற்றம் ஏற்படுகிறது. இந்த மனரீதியான மாற்றத்தைச் சில நேரங்களில் இருதரப்பு குடும்பங்களும் பேசிப்பேசிப் பெரிதாக்கி விடுகின்றனர். இருவரையும் இணைத்து வைக்க வேண்டிய பெற்றோர்களே இத்திருமண உறவுக்கு எதிர்ப்பாக மாறிவிடுகின்றனர்.

மணமக்கள் இருவருக்கும் இடையே உள்ள மனக் கசப்பை மாற்ற முற்படுவதே இதற்குரிய தீர்வாகும். இருதரப்பாரும் கலந்து பேசி மனக் கசப்பைத் தணிப்பதற்கான கலந்துரையாடலுக்கு (Counselling) ஏற்பாடு செய்ய வேண்டும்.

சான்றோர் முன்னிலையில் குல வழக்கங்களின் படியே திருமணங்கள் நடைபெறுகின்றன. இதிலே சச்சரவுகள் வரும்போது அதே முறையைப் பின்பற்றி சான்றோர் முன்னிலையில் அச்சரவுகளைத் தீர்த்துக் கொள்வதற்கான அமைப்பு முறை நகரத்தார் சமூகத்தில் உருவாக வேண்டும்.

## மண முறிவுக்குத் தீர்வு காண ஒரு அமைப்பு வேண்டும்

திருமணம் என்பது ஒரு நிறுவன அமைப்பாக (Insittution) உருவானதைப் போலவே திருமண முறிவுக்குத் தீர்வு காண்பதற்கு சமுதாய அமைப்பு (Community Insitution) உருவாக வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும். பெரிய நகரங்களில் திருமணத்திற்காகச் ‘சுயம்வரம்’ என்ற அமைப்பு உருவாகிச் செயல்பட்டு வருகிறது. இது போலவே திருமணத்தால் ஏற்படும் சச்சரவுகளைத் தீர்ப்பதற்கும் ஒரு வலுவான அமைப்பு நகரத்தார் சமூகத்தில் ஏற்படுத்தப்பட வேண்டும். தொண்ணூற்றாறு ஊர்களாகச் சொல்லப்படும் நகரத்தார் குலமரபினருக்கு நான்கு வட்டகைகன் ஏற்படுத்தி, அவ்வட்டகைகளில் திருமணச் சச்சரவுகளைத் தீர்ப்பதற்கான சான்றோர் பெருமக்கள் கொண்ட குழு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். நமது குல மரபுகளின் அடிப்படையில் நாம் திருமணம் செய்து கொண்டு, பின்னர் நமது சச்சரவுகளுக்கும் பொது நீதி மன்றங்களை அணுகுவதால் காலதாமதமும் பொருட் செலவுமே மிகுதியாகும். குலமரபின் வழிவந்த திருமணத்துக்குக் குலமரபிலான தீர்வே சரியானதாக இருக்க முடியும். திருமணத்தின் போது இசை குடிமானம் நமது சான்றோர் முன்னிலையிலே எழுதிக் கொள்கிறோம். அது போலவே திருமணம் தொடர்பாக ஏற்படும் இல்லற விரிசலுக்குத் தீர்வு காண சான்றோர் பெரியவர்களின் குழு அமைப்பை நாடுவதே சிறப்பானதாக இருக்கும். நகரத்தார் ‘கோயில் குழுவை’ போல நமது பண்பாடு காப்பதற்கு நான்கு வட்டகைகளில் இத்தகைய குழுக்கள் ஏற்படுத்தப் பட வேண்டும். தொண்டு உள்ளமும் சுயநலம் இல்லாத பெரியவர்களும் நகரத்தார் சமூகத்திற்குச் செய்யும் நற்பணியாகக் கருதி இத்தகைய குழுக்களின் பணிகளைச் செயல்படுத்த வேண்டும்.

## உடல் ரீதியானவை

சில மண முறிவுகள் உடல் ரீதியாக ஏற்படுபவை. திருமணத்திற்கு முன்பாக மணமக்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சம்மதித்த பின்பே தற்போதைய திருமணங்கள் பெரும்பாலும் நிச்சயிக்கப்படுகின்றன. ஆனால் திருமணத்தின் பின்னர் உடல் ரீதியாக ஏற்படும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதில் இருவரும் விட்டுக் கொடுத்தால்தான் தீர்வு காண இயலும். ஒருவரை ஒருவர் தியாக உணர்வுடன் ஏற்றால்தான் இப்பிரச்சனைக்குத் தீர்வு காண முடியும்.

## பொருள் ரீதியானவை

சீதனம் கொடுப்பது , முறைகள் வாங்குவது தொடர்பான பொருளாதார ரீதியாகச் சில இடங்களில் இருதரப்பினருக்கும் இடையே கசப்பு உணர்வுகள் மேலிடுகின்றன. இத்தகைய பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பது எளிதாகும். மணமகள் வீட்டாரிடம் ஏராளமாக எதிர்பார்த்துப் பின்னர் அதன் அடிப்படையில் சண்டையிட்டுக் கொள்வதால் இருதரப்பினருக்கும் எவ்வித லாபமும் இல்லை. வாழ்க்கைக்கா ன எவ்வித பண வசதியும் இன்றி வாழ்க்கையைத் தொடங்கிப் பின்னாளில் பொருள் ஈட்டி வாழ்வாங்கு வாழ்ந்த பெரியவர்களை எடுத்துக்காட்டி இத்தகைய மணமகனைச் சீர்திருத்த வேண்டியது சமூகப் பெரியவர்களின் கடமை ஆகும். இத்தகைய மண முறிவுகளைத் தீர்க்கப் பெரிய மனம் படைத்தவர்கள் உதவி செய்து இக்குடும்பங்களை வாழச் செய்யலாம்.

எவ்விதத்திலும் தவிர்க்க இயலாத மணமுறிவுகளை ஏற்றுக்கொள் வேண்டிய கட்டாயச் சூழல் தற்போது ஏற்பட்டு வருகிறது. இவ்வாறு மணமுறிவு பெற்றமணமகனோ, மணமகளோ மற்றொரு திருமணம் செய்து கொள்வதை காலச் சூழல் கருதி நாம் ஏற்பதே தற்போது மாறிவரும் நிலைக்கு ஏற்புடையது.

## மேலைநாட்டுக் கலாச்சாரச் சீரழிவு

மேலை நாட்டுக் கலாச்சாரச் சீரழிவு தொலைக்காட்சி முதலான ஊடகங்களின் வழியாகவும் (Media), மேலை நாடுகளுக்குச் சென்று வருவதாலும், அந்நாடுகளில் வாழ்வதாலும் ஒட்டிக் கொள்கின்றன.

நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் மேலை நாட்டுக் கலாச்சாரம் உலகமயமாதல் (Globalization) காரணமாக நமது வீட்டின் கதவுகளைத் தட்டிக் கொண்டே இருக்கிறது.

இத்தகைய சீரழிவுகளிலிருந்து நம்மை நாமே காத்துக் கொள்ளுவதற்கான பக்குவத்தை நமது குழந்தைகளுக்குத் தொடக்கம் முதல் கற்றுக் கொடுத்து அதனை நாள்தோறும் பின்பற்றும் நடைமுறையாக ஆக்க வேண்டும்.

வீட்டில் விளக்ேற்றி தேவாரம் படித்தல், கந்தசஷ்டி கவசம் படித்தல், சிவபுராணம் படித்தல், இராமாயணம் படித்தல் போன்றவைகளைக் குழந்தைகளின் மனத்தில் படிய வைக்க வேண்டும். கோயில் விழாக்கள் சமூக சமய நிகழ்ச்சிகளுக்குக் குழந்தைகளை அழைத்துச் சென்று இந்நிகழ்ச்சிகளால் உள்ள பலன்களை அவர்களுக்குத் தெரியப்படுத்துதல் வேண்டும். இவையெல்லாம் ஒருவகையில் பண்பாட்டு அறிவைச் செழுமைப் படுத்துபவை ஆகும்.

## மேலை நாட்டுக் கலாச்சாரச் சீரழிவைத் தடுப்பது எங்ஙனம்?

பண்பாட்டு அறிவை வளப்படுத்துவதே, மேலைநாட்டுக் கலாச்சாரச் சீரழிவைத் தடுப்பதற்கான கேடயம் ஆகும். ‘அறிவு’ஒன்றே துன்பத்தைக் காக்கும் கருவி. ஏனென்றால் அந்த அறிவைப் பகைவர்களாலும் தாக்கி அழிக்க முடியாது என்பது திருவள்ளுவரின் போதனை.

அறிவு அற்றம் காக்கும் கருவி; செறுவார்க்கும்
உள்ளழிக் கலாகா அரண்

என்பது திருக்குறள்.

## குழந்தைகளுக்குப் பண்பாட்டை ஊட்டுதல்

குழந்தைகளுக்கு உணவை ஊட்டுவதைப் போலப் பண்பாட்டையும் ஊட்டி ஊட்டி வளர்க்க வேண்டும்.

ஆபாசமான உடை, தவறான உணவுப் பழக்கங்கள், தீயவர் சேர்க்கை ஆகியவை இன்றைய இளைஞர் உலகத்தைச் சீரழிக்கின்றன. இவற்றைத் தடுக்கும் வகையில் எளிய உடை, சத்துள்ள எளிய உணவு முறை, நற்பழக்கங்களில் குழந்தைகளை நாம் உருவாக்க வேண்டும்.

மேலைநாட்டுக் கலாசாரத்தில் உள்ள தொலைத் தொடர்பு, தொழில்நுட்பம், மொழி அறிவு, கலை உணர்வு, சுகாதாரம், தூய்மை ஆகிய நல்ல பண்புகளைக் குழந்தைகள் ஏற்றுக்கொள்வதற்குப் பழக்குதல் வேண்டும். அதில் உள்ள தீமைகளை வீட்டில் உள்ள பெற்றோர் பெரியவர்கள் அடிக்கடி சுட்டிக்காட்டி அவர்களுடைய மனத்தில் நல்ல பண்பாட்டு விதைகளை விதைக்க வேண்டும். வீடு ஒரு பண்பாட்டு நிலையமாக இருக்க வேண்டும். பண்பாட்டுச் சீரழிவைத் தடுப்பதற்கான முதலாவது தொடக்கம் வீடே ஆகும்.

## ஐம்பது ஆண்டுகளுக்குப்பின்னர் உள்ள எதிர்பார்ப்பும் நகரத்தார் பண்பாட்டை நிலை நாட்டுதலும்

இந்தியாவில் உள்ள பாரம்பரியங்களில் ‘நகரத்தால் குலமரபு’ தொன்றுதொட்டு நீண்ட நெடுங்காலமாக வாழையடி வாழையென வந்து கொண்டிருப்பதற்கான அடிப்படைக் காரணம் யாது என்று ஆராயும் போது, நகரத்தார் வாழ்க்கை நடைமுறையில் பின்பற்றி வருகின்ற தருமமே ஆகும். இந்தத் ‘தருமம்’ என்பது குலமரபாக இருந்து வருவதால், உலகில் எவ்வளவு மாற்றங்கள் ஏற்பட்டாலும் நகரத்தார் மேலும் மேலும் தழைத்து ஓங்குவார்கள் என்பது உறுதி.

## சத்திய வாக்கு

‘அறம்’ வெல்லும் பாவம் தோற்கும் என்று உலகத்துக்கு ஒரு காப்பியம் படைத்த கம்பன் கூறியதைப் போல, நகரத்தார் தருமத்தைத் தமது வாழ்வியலின் அடிப்படையாகக் கொண்டு இருப்படதால் என்றென்றும் மற்றவர்களுக்கு ஒரு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்து கொண்டே இருப்பார்கள் என்பது சத்திய வாக்காக, பாடுவார் முத்தப்பச் செட்டியாரின் பாடலில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

காடுவெட்டிப் போட்டுக் கடிய நிலம் திருத்தி
வீடு கட்டிக் கொண்டிருக்கும் வேள் வணிகர் வீடுகட்கு
அன்றைகக்கு வந்த எங்கள் அம்மா இலக்குமியே!
என்றைக்கும் நீங்கள் திரு

என்ற வாக்கால் நகரத்தார் சமூகம் மேலும் மேலும் செழித்து உயர்ந்து ஓங்கும். ‘அம்மா இலக்குமியே’ என்று குறிப்பிடப்படுவது தெய்வத்துக்கு மட்டும் அன்றி வீட்டுக்கு வந்த பெண்ணுக்கும் பொருந்துவதே என்பதை எண்ணி, மருமகளை உயர்வாக்குதல் வேண்டும். அப்பெண்ணும் புகுந்த வீட்டின் மரபுகளை மனதார ஏற்று, மதித்து நடந்து கொள்ள வேண்டும்.

## பொருளாதாரப் பின்னடைவுக்கு வழியில்லை

நகரத்தார் சமூகத்தில் பொருளாதார ரீதியாகப் பின்னடைவு ஏற்பட வழியே இல்லை. ஏனென்றால் ஒரு தலை முறைக்குச் சற்றே பின்னடைவு ஏற்பட்டாலும், அடுத்த தலை முறையில் ஒரு ‘தர்மவான்’ பிறப்பான். அவனால் அந்தக் குடும்பம் முன்னேறும் என்பதே நகரத்தார் சமூகம் இதுவரை கண்டு வரும் வாழ்வியல் முறை. ‘நம்பிக்கை’ நட்சத்திங்கள் தோன்றிக் கொண்டே இருப்பார்கள் என்பதற்காகத்தான் நகரத்தார் வீடுகளின் முன்புறத்தில் ‘வாழைமரம்’ நடும் பழக்க

ஏற்பட்டு நிலைநாட்டப் பட்டுள்ளது. வாழையடி வாழையெனக் குலமரபு மேலும் மேலும் செழிக்கும் என்பதே இதன் உட்பொருள்.

## பொருளாதார முன்னேற்றம்

மகுட தன வைவியர் என்று பழைய வரலாற்றுச் சான்றுகளில் மன்னர்க்கு மகுடம் சூட்டுகிற வளம் மிக்க நகரத்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பொருளாதாரத்தில் இன்றைய உலகில் நம்மை நிலைப்படுத்திக் கொள்ள வலுவான பொருளாதார முன்னேற்ற முறைகளைப் பின்பற்ற வேண்டும். தருமத்துக்கு மாறுபாடான எந்த வணிகத்திலும் நாம் ஈடுபடக் கூடாது. பணம் தொடர்பான நாணயம் நம்பிக்கை என்பதே நகரத்தார் சமூகத்தின் மூல வாக்கியம். இதனை எக்காரணம் கொண்டும் கைவிடுதல் கூடாது. தற்போதைய கல்வி வளர்ச்சிக்கு ஈடுகொடுத்துப் புதிய தொழில் நுட்பங்களில் முதலீடு மற்றும் தொழில் செய்தலில் நமது பொருளாதாரத்தை பலம் பொருந்தியதாக ஆக்க வேண்டும். பொறியியல் மூலமான தொழிற்கட்டமைப்புகளில் நமது பங்கும் பணியும் ஏராளமாக இருக்க வேண்டும். 'இம்பீரியல் பாங்க்'என்ற முறையில் இந்தியாவுக்கு வங்கி நடைமுறையை அறிமுகம் செய்த சமூகம் நகரத்தார் சமூகம் ஆகும். இத்தகைய வங்கி நடைமுறையில் பயனுள்ள பங்களிப்பின் வாயிலாக நமது முன்னேற்றத்தை உறுதி செய்ய வேண்டும். நகரத்தார் இளைஞர் மற்றும் பெண்களுக்கு மிக உயர்ந்த கல்வியைக் கொடுக்க வேண்டும். கல்வி உயர உயரச் சமூகம் உயரும் என்பதை அடிப்படையாகக் கொண்டு புதிய தொழில் நுட்ப அறிவைக் குழந்தைப்பருவம் முதல் கொடுக்க வேண்டும்.

## வெளிநாடு வாழ் நகரத்தார்

வெளிநாடுகளில் பொருள் ஈட்டவும் பணியாற்றவும் சென்றுள்ள நகரத்தார் எங்கே வாழ்ந்தாலும் குல மரபுகளையே பின்பற்ற வேண்டும். முன்பெல்லாம் பர்மா தாய்லாந்தில் வாழ்ந்தவர்கள் மீண்டும் தாயகத்துக்கு வந்து வாழ்ந்ததைப் போல வெளிநாடுகளில் தங்கி விடாமல் தாயகத்தில் வாழ்வதே சிறப்புடையதாகும்.

## இறைபணி

முன்னோர் செய்து வந்த தருமங்கள் இறைபணிகள் தொடர ஆவன செய்ய வேண்டும். தருமங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட சொத்துகள் தற்போது பராமரிப்பு இன்றி நலிவு அடைவதைத் தடுத்து நிறுத்த வேண்டும். தரும சொத்துகள் குறித்து பங்காளிகளுக்குள் சண்டை போட்டுக் கொண்டு தருமச் செயல்கள் நடைபெறா வண்ணம் தடுப்பது கூடாது. தருமச் சொத்துக்களைக் காத்து, முன்னோர் செய்து வைத்த தருமங்கள் தொடர்ந்து நடைபெற, குழுக்கள் அமைக்கப் பட்டுச் செயல்படுத்த வேண்டும்.

சிவன் கோயில்கள், குலமரபு ஐயனார் கோயில்கள் ஆகியவற்றைக் கட்டிக் காத்து அவற்றை மேலும் வளப்படுத்த, முன்பே ஏற்படுத்தப்பட்ட வருமானப் பங்கினைத் தவறாமல் தந்து உதவ வேண்டும். குலம் விளங்குவதற்காக குலதெய்வ வழிபாடு ஏற்படுத்தப்பட்டது. வருடம் ஒரு முறை குலதெய்வ வழிபாட்டில் கூட்டாகஅவைரும் பங்கேற்க வேண்டும்.

## கோயில் பூசைகள்

கோயில் பூசைகள் சரியாக நடைபெறுவதற்குப் பல ஊர்களில் குழுக்கள் இருக்கின்றன. சில ஊர்களில் இத்தகைய குழுக்கள் சரியாக நடைபெறவில்லை. இக்குழுக்களை வலுப்படுத்தி நகரத்தாரிடம் கோயில் வரி பெற்றுச் சீர்திருத்தம் செய்வது நமது பண்பாட்டை நிலைநிறுத்த முக்கிய வாயிலாகும்.

கோயிலில் தேவாரம் பாடும், ஓதுவார்கள் கட்டாயம் இருக்க வேண்டும். ‘அருச்சனை பாட்டே ஆகும்’ என்று சமய குரவர் சொன்னபடி தேவாரம் திருவாசகம் கோயில்களில் நாள்தோறும் ஒலிக்க வேண்டும்.

நமது பொதுச் சொத்துகள் தொடர்பான பிரச்சனைகளை நீதி மன்றத்துக்குக் கொண்டு செல்லாமல் நமக்குள் நாமே தீர்வு கண்டு, காலக் கழிவு பொருட்கழிவைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

### பொதுப்பணம்

ஊரில் உள்ள நகரத்தார் பொதுப் பணத்தைக் கொண்டு கல்வி உதவி செய்தல், திருமண உதவி செய்தல், தமிழ் நூல்கள் அச்சிடல், வருவாய்க்குரியவற்றில் முதலீடு செய்தல் ஆகியவை தொடர வேண்டும்.

### திருமண நடைமுறை

திருமண நடைமுறையில் உள்ள சிக்கல்களைத் தீர்த்து எளிய நடைமுறைகளாகப் பின்பற்ற வேண்டும்.

திருமணத்தில் ஆடம்பர உணவு வகைகளைத் தவிர்க்க வேண்டும். இந்தியாவில் 30% பேருக்குச் சர்க்கரை நோய் இருக்கிறது என்று நல ஆய்வு அறிக்கை கூறுகிறது. எனவே திருமண வீடுகளில் பச்சைக் காய்கறிகள் (Salads), எண்ணெய் இல்லாத பண்டங்கள், பழங்கள், பரிமாறப்பட வேண்டும். சில திருமண வீடுகளில் உணவு உண்ட பின் இரண்டு மூன்று நாட்களுக்கு உடல்நலம் கெட்டுப் போகும் ‘அபாயம்’ இன்றைக்கு இருக்கிறது. தேவையற்ற இனிப்புப் பண்டங்களைத் தவிர்த்து சத்துள்ள உணவு முறைகளைக் கையாள வேண்டும்.

வரதட்சிணைபற்றிப் பலமுறை பேசியாகி விட்டது. வரதட்சிணை கொடுக்க இயலாதவர்கள் தவிப்பதை மேலும் வேடிக்கை பார்ப்பது சரியன்று. பொதுப் பணத்திலிருந்து திருமண உதவிகள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும். வசதி வாய்ப்பு அற்றவர்கள் முன்னேற, மற்ற சமூகங்களில் இருப்பதைப் போல நாமும் கைதூக்கிவிட வேண்டும்.

வசதியில்லாதவர்களைப் பாராமுகமாக இருப்பது நகரத்தார் சமூகத்தில் உள்ள குறைபாடுகளுள் ஒன்று. வசதியற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு, தொழில் செய்ய உதவி, அவர்களின் குழந்தைகளுக்கான படிப்பு வசதி ஆகிய உதவிகளைப் பொதுப்பணத்திலிருந்து செய்ய நம் சமூகத்தினர் முன்வர வேண்டும்.

### முதியோர் பாதுகாப்பு

முதியவர்கள் குடும்பத்தின் செல்வம். பல சமூகங்களில் மூத்தவர்களைப் பாதுகாப்பதை முக்கிய கடமையாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். நகரத்தார் சமூகத்தில் மூத்து முதிர்ந்தாவர்கள் சரியாகக் கவனிக்கப் படாமல் இருப்பது பெரும் குறையாகும். முதியவர்களை இவ்வாறு கவனிக்காமல் விட்டுவிடுவது பெரும்பாவம் என்பது சான்றோர் மொழியாகும்.

பிள்ளைகள், பெற்றோர்களைத் தவிக்க விடாமல் அனைத்து உதவிகளும் செய்ய வேண்டும். பல பிள்ளைகள்தாய் தந்தையரைத் திரும்பியும் பாராமல் வெளி நாடுகளில் அல்லது அயல் ஊர்களில் வசித்து வருகிறார்கள. இது தவறான நடைமுறை. பொங்கல், தீபாவளி போன்ற விழாக்காலங்களில் வீட்டுக்கு வந்து இருந்து, பெற்றோர் வாழ்த்துகளைப் பிள்ளைகள் பெறுவது இன்றியமையாதது.

குறிப்பிட்ட ஓர் இடத்தில் உணவு சமைத்து, வயது முதியவர்களுக்குக் கொண்டுபோய்க் கொடுக்கும் வழக்கம் செட்டிநாட்டில் சில ஊர்களில் இருக்கிறது. இதற்காக நியாயமான கட்டணம் பெறுகின்றனர். இப்பழக்கம் அனைத்துச் செட்டிநாட்டு ஊர்களுக்கும் பரவ வேண்டும்.

முக்கிய ஊர்களில் முதியோர் இல்லங்கள் அமைக்கப் படுவது காலத்தின் தேவை. இங்கு இருக்க விரும்பும் முதியவர்களுக்கும் உரிய வசதி வாய்ப்பை அளிப்பது நமது கடமை ஆகும்.

## நகரத்தார் வீடுகளைக் காத்தல்

இப்போது செட்டிநாட்டில் உள்ள அனைத்துப் பழைய வீடுகளும், இந்நிய நாகரிகத்தின் சிறந்த சின்னங்கள் (Symbols). பழைய வீடுகளை இடிக்காமல் அவற்றைப் பேணிக்காப்பது நமது முக்கிய பொறுப்பு.

வீட்டின் பங்குக்காரர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டு பராமரிக்காமல் அதனை இடிக்கின்ற அளவுக்கு மெத்தனமாக இருந்து விடுகின்றனர்.

வீட்டின் பங்குக்காரர்கள் தமது வருமானத்தின் ஒரு பகுதியை, வீட்டின் பராமரிப்புக்கென ஒதுக்கி அதை கூட்டுக் கணக்கில் வங்கியில் வைப்பு நிதியாக வைத்து வரவேண்டும். தேவைப்படும் போது அதை எடுத்து, வீட்டினைப் புதுப்பிக்கப் பயன்படுத்த வேண்டும். பங்குதாரர்களுக்குப் பொதுவாக உள்ள பிற வீடுகளிலிருந்து வரும் வாடகை, இதர முதலீட்டு வருவாய்கள் ஆகிய இனங்களிலிருந்து பொது வீட்டின் பாதுகாப்புச் செலவினத்தைச் சகோதரர்களாக இருப்பவர்கள் செய்ய வேண்டும். முன்னோர்கள் உயர்ந்த நோக்கங்களுடன் கட்டிய வீட்டை அதிலுள்ள பழைய மரங்களுக்காகவும், இடத்துக்காகவும் இடிப்பது மிகப் பெரும் தவறாகும்.

## நகரத்தார் உறவுகளைக் காத்தல்

நகரத்தாரிடம் ஒருவரை ஒருவர் குறை கூறும் பழக்கம் இருந்து வருகிறது. சில சமயங்களில் இவ்வாறு குறை கூறுவதே பெரும் சண்டையாக உருவாகி உறவில் விரிசல் ஏற்படுகிறது. கூடிய வரை சிறிய பிரச்சனைகளைப் பெரிது படுத்தாமல் ஒற்றுமையுடன் உறவு கொண்டாட முன்வர வேண்டும்.

## தமிழ்மொழி வளர்ச்சி

நகரத்தார் சமூகம் தாய்மொழியாகிய தமிழ்மொழி வளர்ச்சியில் தமிழகத்தில் மிகப்பெரிய பங்கு பணியாற்றியுள்ளது. இது மேலும் மேலும் தொடர வேண்டும். நகரத்தார் கைக் கொள்ளும் பக்திப் பனுவல்கள் தமிழில் உள்ளதைப் போல வேறு எம்மொழியிலும் இல்லை. எனவே சீரிய தமிழ் நூல்களை வரவேற்றுப் பதிப்பித்தல், தமிழ் இசை வளர்த்தல், தமிழ் வழிபாட்டு முறை வளர்த்தல் ஆகிய பணிகளில் மேலும் காலூன்றிச் செயல்பட வேண்டும்.

## கல்வி நிலையங்கள்

அண்ணாமலை அரசர் பல தொழில்களைச் செய்த போதும் அவருக்குக் குன்றாப் புகழை ஈட்டித் தந்தது அவர் அமைத்த அண்ணாமலைப் பல்கலைக் கழகமே ஆகும். பல பணியாற்றினும், கல்விப் பணியே மேன்மைப் பணியாகும். எனவே செட்டிநாட்டு ஊர்ப்பகுதியில் பலரும் ஒன்று சேர்ந்து தொழில் நுட்பம், மருத்துவம் போன்ற புதிய கல்வி முறைகளை வழங்கும் கல்வி நிலையங்களை உருவாக்க வேண்டும். இவ்வாறு செய்தால் இப்பகுதியின் வருவாய் மிகுதியாகும். பலரும் நன்மை பெறுவர்.

## நிறைவுரை

மேலே கூறப்பட்டவை ஐம்பது ஆண்டு எதிர்பார்ப்புக்குத் தேவையான ஒரு சில முன்னேற்ற வாயில்களே. இவை போன்ற இன்னும் பல வாயில்கள் நமது முன்னேற்றத்திற்காகத் திறக்கப்பட வேண்டும். இன்னும் ஐம்பது ஆண்டுகளில் ஒளி உள்ள, உணர்வு மிக்க, உயர்ந்த எடுத்துக்காட்டான சமூகமாக நகரத்தார் சமூகம் நலம் வாய்ந்தும் மிக்க வளம் வாய்ந்தும் திகழும்.